**DEPOSITION OF WITNESS**

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No–135/2020**

**PW–1**

**Date :–05.10.2023**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. நாகலட்சுமி | Caste | |
| S/o | திரு. நாரணயணசாமி | Calling | |
| Village | ரெங்கநகர் ஸ்ரீரங்கம் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 66 /2023 |

**எதிரிகள் ஆஜர் எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்–**

**அரசு தரப்பு முதல் விசாரணை–**

நான் ஸ்ரீரங்கா நகரில் வசித்து வருகிறேன் . நான் வீட்டுக்குடிதனம். கடந்த 06.11.2019 ம் தேதி மாலை 6.45 to 7.00 மணிக்குள் BG நாயுடு ஸ்வீட்ஸ் கடையிலிருந்து வீட்டிற்கு நடந்து வந்துகொண்டிருந்தேன் . நான் எனது வீட்டிற்குள் நுழைவதற்கு 2 அடி துரத்திற்கு முன் ஒரு சின்ன பையன் நடந்து வந்து எனது கழுத்தில்அணிந்திருந்த 5 பவுண் தங்க செயினை பறித்து சென்று ஒரு 10 அடி துரத்தில் இருந்த ஒரு இருசக்கர வாகனத்தில் ஏறி சென்றுவிட்டார் . அந்த இருசக்கர வாகனத்தை மற்றொரு நபர் ஓட்டி சென்றார் . அந்த என்னை கீழே தள்ளிவிட்டார் . பிறகு பதட்டமாகி விட்டேன் . பிறகு நான் சத்தம் போடவும் அருகில் இருந்தவர்கள் மற்றும் எனது குடியிருப்பை சார்ந்தவர்கள் வந்துவிட்டனர் . பிறகு பொதுமக்கள் சொல்லி போலீசார் வந்தனர் . பிறகு நான் சொல்ல , சொல்ல ஒரு பெண் காவலர் புகார் எழுதிக்கொண்டார் . நான் அதை படித்து பார்த்துவிட்டு கையொப்பம் செய்தேன் . என்னிடம் காட்டப்படும் அந்த எழுத்துமூல புகார்தான். அந்த எழுத்துமூல புகார் அ.சா.ஆ.1 ஆக

குறியீடசெய்யப்படுகிறது. பிறகு போலீசார் விசாரணை செய்து இரண்டு நாட்களுக்கு பிறகு என்னை விசாரணைக்கு அழைத்தனர். நான் நடந்த விவரங்களை கூறினேன். பிறகு நான்கு நாட்கள் கழித்து என்னை விசாரணை செய்தனர் பிறகு அந்த செயினை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் RP.No.50/2022 புகைப்படத்தில் உள்ள சான்றாவணம் அ .சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை—

எனது வீட்டிற்கு ஒரு போலீசார் புகார் எழுத எத்தனை மணிக்கு வந்தனர் என்றால் சம்பவ தினத்தன்று இரவு 08.45 மணிக்கு வந்தார். அப்போது என்னுடன் எத்தனை பேர் இருந்தனர் என்றால் 10, 15 பேர் இருந்தனர். அப்போது எத்தனை போலீசார் வந்திருந்தார்கள் என்றால் 4, 5 போலீசார் வந்திருந்தார்கள். அந்த பெண் போலீஸ் எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் கேட்டனர் நான் கையொப்பம் செய்தேன் .நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போன்னு படித்து பார்த்து நான் சொன்னபடி சரியாக இருந்தது என்று வாசகம் இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த செயின் அறுத்து சென்றுள்ளார்கள் என்றால் சரிதான். பொதுவாக இந்த வழக்கில் கண்டுள்ள செயின் நகைகடையில் வாங்ககூடியது என்றால் சரிதான். போட்டோவில் காண்பித்த செயினை சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் பெற்றுக்கொண்டேன் என்றால் ஆமாம். இந்த சம்பவம் எனது வீட்டிற்கு முன்பாக என்றால் சரிதான். இந்த சம்பவம் யாரு பன்னினார்கள் என்ற

**விவபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் . எனது புகார் மனு போலீஸ் விசாரணையிலும் செயினின் மாடலை சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 செயின் அறுந்த நிலையில் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நாளில் , சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எங்கோ காணாமல் போன நகையை போலீசாரிடம் பொய் புகார் கொடுத்து போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**– Sd – xxx**

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

**– Sd – xxx**

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam

**DEPOSITION OF WITNESS**

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No-135/2020**

**PW-2**

**Date :-05.10.2023**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. ரேணுகா | Caste | |
| S/o | திரு. ஜெகன் | Calling | |
| Village | ரெங்கநகர் ஸ்ரீரங்கம் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 33/2023 |

**எதிரிகள் ஆஜர் எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்-**

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

நான் ஸ்ரீரங்கம் ரெங்கா நகரில் வசித்து வருகிறேன் . நான் டைலரிங் வேலை செய்து வருகிறேன் . அ.சா.1 நாகலட்சுமியை எனக்கு தெரியும் . தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 06.11.2019 ம் தேதி இரவு 09.30 மணியளவில் ரெங்க நகரில் போலீசார் வந்து BG நாயுடு ஸ்வீட்ஸ கடை நேர் ரோட்டின் அருகே போலீசார் வந்து வரைபடம் வரைந்தனர் . விசாரணை செய்தனர் . என்னுடன் அந்த ஆவணத்தில் பாலாஜி என்பவரும் கையொப்பம் செய்தார் . அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலீசார் அந்த இடத்தில் அ .சா.1 ன் செயின் பறித்தது தொடர்பாக வந்து விசாரணை செய்து ஸ்ரீரங்கம் போலீசார் படம் வரைந்தனர். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

அ.சா.1 எனக்கு என்ன உறவுமுறை என்றால் பக்கத்து வீடு . BG நாயுடு ஸ்வீட்ஸ் கடைக்கும் அ .சா.1 ன் வீட்டுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 நிமிடத்தில் செல்லலாம். சுமார் 500 மீட்டர் தூரம் இருக்குமா என்றால் இருக்கும் .நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில நான் எந்தவிதமான கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல . போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**– Sd – xxx**

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

**– Sd – xxx**

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam